# அம்மா என்று அழைத்தால்

அம்மா என்று அழைத்தால்
குழந்தாய் என்று வருவாய்
அபயம் என்று சொன்னால்
அன்பாய்த் தூக்கி நெஞ்சில் வைத்து
என்னைக் காத்துக் கொள்வாய்

**1**
வேடிக்கை உலகம்
பின்னால் நான் சென்றேன்
வேண்டியதெல்லாம்
தருமென்று நான் சென்றேன்
மீளாத் துன்பம் நானடைந்தேன்
என்னிலை நானுணர்ந்தேன்
அம்மா உனையழைத்தேன்

**2**
மின்னுவதெல்லாம் பொன்னென்று
நான் கொண்டேன்
வெளுத்தவை யாவும் பாலென்று
நான் உண்டேன்
பொன்னும் தீயானது
பாலும் நஞ்சானது
அம்மா உனையழைத்தேன்